[27th December 1956

Poor Homes in the City

9-10 a.m. *426 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of poor homes in the City of Madras during the year 1956 ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The number is twelve.

SRI N. K. PALANISAMY : இம்மாதிரி பிச்சைக்கார விடுதிகளைவைத்து நடத்தியதில் எந்த அளவுக்கு அவர்களுக்கு பரிகாரம் ஏற்பட்டிருக்கிறது ? அப்படி ஏதாகிலும் பரிகாரம் ஏற்பட்டிருந்தால் இன்னும் அதிகப்படியான விடுதிகளை திறப்பதற்கு சரக்கார் யோசனை செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்குள்ள பிச்சைக் காரர்களுக்கு பரிகாரம் கிடைத்திருக்கிறது. அங்கு அவர்களைப் பரா மரிக்கப்படுகிறது. அவர்களுக்கு உணவு எல்லாம் கொடுக்கப்படுகிறது. பிச்சைக்கார விடுதிகளை இன்னும் அதிகப் படுத்த வேண்டும் என்ற யோசனை சரியல்ல. அதை அதிகமாக ஏற்படுத்தாமல் இருப்பதற்கு அவர்களுக்கு வேறு திட்டம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

SRI V. BALAKRISHNAN : அந்த விடுதியில் கனம் அங்கத்தினர்கள் எத்தனை பேர்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் போனபோது அங்கத் தினர்கள் ஒருவரையும் நான் பார்க்கவில்லை.

SRI K. VINAYAKAM : இந்தப் பிச்சைக்கார விடுதியை நடத்துவதில் ஒரு சின்ன கஷ்டம் இருக்கிறது. பிச்சைக்காரர்களைப் பிடித்து அவர்களை அந்த விடுதிக்குக் கொண்டுபோய் அடைத்து வைத்தால் அவர் கள் அங்கே இருப்பதற்கு விருப்பம் இல்லாமல் எப்படியாகிலும் வெளியே வருவதற்கு முயற்சிக்கிறார்கள், அப்படி அநேகர் வெளியே போய் விட்டார் கள். ஆதலால் அவர்கள் அப்படிப்போகாமல் இருப்பதற்கு அந்த விடுதி களை சென்னையில் அமைக்காமல் பக்கத்திலுள்ள ஆவடி போன்றஇடங்களில் அமைப்பதற்கு கார்போரேஷனுக்கு யோசனை கூறுவார்களா ? அப்படி அங்கு கார்போரேஷன் அமைத்தால் அதற்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது நடந்து கொண்டு வரும் ஸ்தாபனம் நல்ல முறையில் நடந்து கொண்டுதான் வரு கிறது. பிச்சைக்காரர்கள் அப்படி ஒன்றிரண்டு பேர்கள் தான் வெளியே சென்றிருப்பார்கள். வேறு விதத்தில் எந்த விதமான கஷ்டமும் இல்லை. அவர்கள் எங்கே போனாலும் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை மறுபடியும் பிடித்துக்கொண்டு வந்து அங்கே விட்டு விடுவார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படும். கார்போரேஷன் அதிகப் படியான விடுதிகளை அமைத்தால் அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்பது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம்.

SRI K. R. SAMBANDAM : இப்படிப்பட்ட பிச்சைக்கார விடுதி சென்னை நகரத்தில் இருப்பதுபோல் மற்ற இதர நகரங்களிலும் விஸ்த ரிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் சில இடங்களில் அப்படி ஏற்பாடு செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறார்கள்.

Government buses in Kanyakumari district

* 429 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether the students of Kanyakumari district were allowed any concession in fares in Government buses by the former Travancore-Cochin State before its merger into Madras State; and